# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு எண். 129/2018/பே/
ஆணை நாள். 03–09–2018

********

திரு. C. ராஜவேலு,
H-4, பாலார் கார்டன்,
சத்துவாச்சாரி,
வேலூர்–632 009. -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
உதயேந்திரம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை.

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, H.4, பாலார் கார்டன் பகுதியினைச் சேர்ந்த திரு.C.ராஜவேலு என்பவரின் 08.06.2018ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 11.08.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.129/2018 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், வேலூர் மாவட்டம், உதயேந்திரம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி காவலர் பணியிடம் பூர்த்தி செய்ததில் முறைகேடு என புகார் தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முமைன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.06.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீடு தொடர்பாக உதயேந்திரம் பேரூராட்சி ஆவணங்களை பரிசீலித்தும், ஆய்வு மேற்கொண்டும் பணியிடம் நிரப்பிய விதத்தில் கடைபிடிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றினை சரிபார்த்து

அதன் உண்மை நிலைக் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a)ன் கீழ் வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.666/2018/அ/நாள்.12.08.2018ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

உதயேந்திரம் பேரூராட்சியில், 04.05.2017 முதல் காலியான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக் காவலர் பணியிடம் நிரப்புவது சம்பந்தமாக, அரசு நிறுவனங்களில் பணிபுரிந்து வேலையிழந்தோர் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களிடமிருந்து பட்டியல் மற்றும் பணியாளர்கள் எவருமில்லையென சான்று பெறப்படாமல், வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மேற்படி பணியிடம் பூர்த்தி செய்யத் தகுதி வாய்ந்த நபர்களின் பட்டியல் கோரி உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 99/2017/நாள் 16.06.2017ல் அனுப்பப்பட்டதாகவும், அதனடிப்படையில் வேலூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் இரு நபர்களின் பட்டியல் 06.07.2017ல் பெறப்பட்டதாகவும், மேலும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அரசாணை எண்.44/நாள்.11.03.2015ன் அடிப்படையில், உதயேந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.99/2017, நாள். 28.07.2017ம் தேதி அறிவிப்பு கடிதம் மூலம் தினமணி நாளிதழில் 01.08.2017ல் விளம்பரம் செய்யப்பட்டு, வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெறப்பட்ட இரண்டு நபர்களுக்கு நேர்காணல் கடிதம் 31.07.2017ல் அனுப்பப்பட்டு, 10.08.2017ல் நேர்காணல் நடத்தப்பட்டதில், மேற்படி நேர்காணலில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட நபர்கள் கலந்து கொள்ளவில்லையெனவும், தினமணி நாளிதழ் விளம்பரத்தின் அடிப்படையில் 1 நபர் மட்டுமே கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம், கிண்டி, சென்னை-32 கடித எண்.பப.1/14363/2016, நாள்.03.06.2016 கடிதத்தின்படியும், அரசாணை நிலை எண்.162, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை நாள். 21.09.1999ன்படி ஒவ்வொரு நியமன அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள பணியிடங்களுக்கான பணி நிலைப்பிரிவின் எண்ணிக்கை (Cadre Strength of Post) ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தால் மட்டுமே நேரடி நியமன முறையில் பொது விதி-22ன்படி இட ஒதுக்கீடு முறை சுழற்சி பட்டியலின் அடிப்படையில் பின்பற்றப்பட வேண்டுமெனவும், இவ்வெண்ணிக்கை ஒன்று என இருப்பின் இட ஒதுக்கீடு முறை சுழற்சி பட்டியலின் அடிப்படையை பின்பற்றாமல் அனைத்து மனுதாரர்களையும் பணிக்காலியிடத்திற்கு கருதப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் மேற்படி பணியிடம் நிரப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தெரிவு செய்யப்பட்ட திரு.எஸ்.இரவிச்சந்திரன் என்பவரின் பிறந்த தேதி 05.05.1982 என்ற நிலையில் இவர் பிற்பட்ட வகுப்பினை சார்ந்தவர் என்பதால் நேர்காணல் நாளில் அன்னாரின் வயது 35 ஆண்டுகள் என்பதாலும், மேற்படி நபர் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 31.12.2009ல் பதிவு எண்.VLD2009M00026386-ன்படி பதிவு செய்துள்ளதாலும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை எண்.217 நாள்.02.02.2000ல் SSLC க்கும் குறைவான கல்வித் தகுதியுடைய பணியிடங்களுக்கு வயது வரம்பில் சலுகையாக வேலை வாய்ப்பு

அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் ஒவ்வொரு முடிவுற்ற மூன்றாண்டுகளுக்கும் ஒரு வருடம் என்று அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை வயது உச்ச வரம்பில் சலுகை அளிக்கப்பட்டுள்ளதாலும், வயது வரம்பில் சலுகை அளித்து உதயேந்திரம் பேரூராட்சியில் காலியாக இருந்த பணியிடத்தினை வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியல் மற்றும் தினமணி நாளிதழில் விளம்பரம் மற்றும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி காவலர் பணியிடத்தில் திரு.எஸ்.ரவிச்சந்திரன் என்பவரை உரிய நடைமுறைகளை பின்பற்றி பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் நேர்முகத் தேர்வில் மூன்று நபர்கள் கலந்து கொண்டனர் என பணி நியமன ஆணையில் தெரிவித்துள்ளமைக்கு மேற்படி நிகழ்வு தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்து எனவும் பின்னர் இப்பிழை கண்டறியப்பட்டு திருத்திய நியமன உத்திரவு செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

. வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் உதயேந்திரம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பணியிடம் நிரப்பியது தொடர்பாக உரிய அரசாணை மற்றும் இதர ஆதார ஆவணங்களையும் சமர்ப்பித்து விதிமுறைகளின்படி மேற்படி பணியிடம் நிரப்பியுள்ளதாக தெரிவித்து உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே முற்றிலும் பணியமைப்பு / நிர்வாகம் தொடர்பான இப்பொருள் குறித்து முறையீடு ஏதுமிருப்பின் துறைத் தலைவரிடம் முறையீடு செய்து கொள்ள வழிவகை உள்ளதெனவும் தெரிவித்து, இம்முறையீட்டு மனுவினை 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(4) ன் கீழ் தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03 -ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர். 7/9/2018

698

7/9/18

பெறுநர்

1.திரு. C. ராஜவேலு,
H-4, பாலார் கார்டன்,
சத்துவாச்சாரி,
வேலூர்-632 009.

2.செயல் அலுவலர்,
உதயேந்திரம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர்.